# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,156 — 1960 ජූලි 8 වැනි සිකුරාදා — 8.7.1960

12,156 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 8 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV — உள்ளூர் ஆட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. .. | — | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| பரீட்சைகளும்; பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணைவிதிகள் .. .. .. | 35 | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகாரநிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. | — | நாணுவிதம் .. .. .. | 35 |


## துணை விதிகள்

### கிராம சமுதாயச் சட்டம்

கிராம சமுதாயச் சட்டத்தின் (அத்தியாயம் 198) 49 ஆம் பிரிவின்படி மட்டக்களப்பு மாவட்டத்து கரவாகு வடக்கு கிராமப் பகுதியின் கிராமச் சங்கத்தால் ஆக்கப்பட்டு, 1947 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதி வெளியான 9,773 ம் இலக்க விசேட வர்த்தமானியில் பிரசுரமான பிரகடனத்தால் திருத்தப்பட்ட அப்பிரிவு தம்மீது வைத்த தத்துவங்களின் பலத்தைக்கொண்டு உள்ளூராட்சி, வீடமைப்பு அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட உபவிதிகள்.

வீ. சீ. ஜயசூரிய,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி, வீடமைப்பு அமைச்சு.

கொழும்பு,
1960 ம் ஆண்டு ஜூன் மீ 20 ந் உ..

**உபவிதிகள்**

கட்டிடங்களும் எல்லைச் சுவர்களும் அமைத்தல்

1. (1) எவரேனும், கிராமப் பகுதிக்குள், புதிய கட்டிடம், எல்லைச் சுவர் அல்லது வாயில் முகப்பு எதையும்—

(அ) கிராமச் சங்கத் தெரு எதனதும் மத்தியிலிருந்து பதினைந்தடி தூரத்துக்குள்ளேனும் ; அல்லது

(ஆ) கிராம வண்டிப்பாதை எதனதும் மத்தியிலிருந்து பதினைந்தடி தூரத்துக்குள்ளேனும் ; அல்லது

(இ) காலக்கிரமத்தில் ஒரு கிராம வண்டித் தெருவாக மாற்றப்படவிருக்கும் பாதையென சங்கத்தால் அறிவிக்கப்பட்டிருக்கும் கிராமப்பாதை எதனதும் மத்தியிருந்து பதினைந்தடி தூரத்துக்குள்ளேனும் ; அல்லது

(ஈ) காலடிப்பாதை அல்லது இப்பந்தியின் (இ) உட்பந்தியில் சொல்லப்படும் ஒரு பாதையல்லாத ஒடுங்கிய வழி எதனதும் மத்தியிலிருந்து ஏழடி தூரத்துக்குள்ளேனும் நிர்மாணிக்கலாகாது.

(2) தலைவருக்கு அதைப்பற்றி முப்பது நாட்களுக்காவது முன்னராக, எழுத்தில் அறிவிக்காமல், எவரேனும் கிராமப் பகுதிக்குள் (1) ம் பந்தியில் சொல்லப்படும் தெரு, வண்டிப்பாதை, பாதை அல்லது காலடிப்பாதை அல்லது ஒடுங்கிய வழி எதனதும் ஓரமாக, புதிய கட்டிடம், எல்லைச் சுவர் அல்லது வாயில் முகப்பு எதையும் நிர்மாணிக்கலாகாது.

2. இந்த உபவிதிகளில்—

" தலைவர் " என்பது சங்கத் தலைவர் எனப் பொருள்படும் ;

" சங்கம் " என்பது கிராமப் பகுதியின் கிராமச் சங்கம் எனப் பொருள்படும் ;

" காலடிப்பாதை " அல்லது " ஒடுங்கிய வழி " என்பது நாலடி முதல் ஆறடிவரை அகலமுள்ள ஒரு வழி எனப்பொருள்படும் ;

" கிராமப் பகுதி " என்பது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கரவாகு வடக்குகிராமப் பகுதி எனப் பொருள்படும் ;

" கிராம வண்டிப் பாதை " என்பது ஒன்பதடி முதல் பதினான்கடிவரை அகலமுள்ள ஒரு தெரு எனப் பொருள்படும் ;

" கிராமச் சங்கத் தெரு " என்பது சங்கத்தால் பராமரிக்கப்படும் பதினான்கு அடிக்குக் குறையாத அகலமுள்ள ஒரு தெரு எனப் பொருள்படும் ;

" கிராமப் பாதை " என்பது ஆறடி முதல் ஒன்பதடிவரை அகலமுள்ள ஒரு வழி எனப் பொருள்படும்.

---

## நாணுவிதம்

### விசர் நாய் கட்டளைச் சட்டம்

கொழும்புப் பட்டணத்தில் நகரசங்க எல்லைக்குட்பட்ட பரப்பு முழுவதையும் விசர்நாய்கள் இருக்கிற அல்லது விசர்நாய்களால் தீங்கு நேரிடக்கூடிய ஒரு இடமாக, நான் இத்தால் விளம்பரம் செய்கிறேன். பிரசித்த இடத்தில் அல்லது தெருவில், கட்டப்படாமல் விடும் அல்லது வழி நடத்திக்கொண்டு போகப்படாமலிருக்கும் எந்த நாயும் கொல்லப்படும்.

மகசின் ரோட்டு நகரசங்க விசர் நாய் வைத்திய சாலையில் நாய்களுக்கு விசர் வராமல் தடுத்தற்கு இலவசமாக பால் கட்டப்படும்.

பி. எ. ஜயசிங்ஹ,
நகர சங்க கமிஷனர், கொழும்பு.

நகர சங்கக் கந்தோர், கொழும்பு,
1960 ம் ஆண்டு ஜூலை மீ 1 ந் உ.


இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.